DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.96/2025**
Prosecution Witness P.W.13

| | |
|---|---|
| Name : **திருமதி.Dr.சுபத்ரா** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

எதிரிகள் ஆஜர்
**நாள்: 03.02.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தேனி அரசு மருத்துவக் கல்லூரியில் நோய் கூறியியல் துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் 18.11.2019 ஆம் தேதியன்று தேனி அரசு மருத்துவக் கல்லூரியில் இணை பேராசிரியராக பணியில் இருந்தபோது ஹபிபுல்லா 45 வயது மதிக்கத்தக்க ஆண் என்பவரது உடல் உடற்கூராய்வு செய்யப்பட்டு சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் இருந்து இருதயம், மூளையில் ஒரு பகுதி, ஒரு சிறுநீரகம், கல்லீரலின் ஒரு பகுதி இவை நான்கும் எங்களது நோய் கூறியியல் துறைக்கு திசு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

2. எங்களது பரிசோதனை முடிவில் இருதயத்தின் தசை நார்கள் சுருங்கி இருந்தன. பெருந்தமனியில் கொழுப்பு தமனியின் சுவர்களில் படித்திருந்தது. மூளையின் உள்பகுதியில் ஒரு இடத்தில் திசுவின் இறப்பு கண்டறியப்பட்டது. சிறுநீரகத்தில் பல இடங்களில் ரத்தத்தை வடிகட்டும் கிளாமருலஸ் என்ற அமைப்பு நுண்ணிய வடுக்கள் காணப்பட்டது. எங்களுக்கு அனுப்பப்பட்ட கல்லீரலின் பகுதியில் எந்த நோய்க்கான அறிகுறியும் கண்டறியப்படவில்லை. இது சம்பந்தமாக நான் வழங்கிய பேத்தாலஜி அறிக்கை அ.சா.ஆ.10 ஆக

ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்.

<u>**நீதிமன்ற கேள்வி**</u>

1. எங்களது ஆய்வின் முடிவில் இறந்து போனவருக்கு TB–நோய் அறிகுறிகள் இருந்ததாக ஆய்வில் வரவில்லை. எந்த பகுதியில் ஒரு நோயாளிக்கு TB–நோய் தாக்குதல் ஏற்பட்டு அவர் சிகிச்சை எடுத்துக்கொண்டு குணமாகி இருக்கும் பட்சத்தில் அவருக்கு அந்தப் பகுதியில் பேத்தாலஜி ஆய்வு மேற்கொண்டால் அந்தப் பகுதியில் அவருக்கு TB–நோய் இருந்ததற்கான வடுக்கள் தெரிய வாய்ப்பு உண்டு. எங்கள் பரிசோதனையின்படி TB–நோய்க்கான அறிகுறிகள் தென்படவில்லை.

2. TB–நோயால் ஒரு நபருக்கு மரணம் ஏற்படும்போது மூளையில் அவருக்கு கேஸியேஷன் ஏற்படும். அவரது மூளை செல்களானது சீஸ் போன்று ஏற்படும். இந்த வழக்கைப் பொருத்தவரை அவ்வாறு கேஸியேஷன் ஏற்படவில்லை என்பதால் அவர் TB–நோயால் பாதிக்கப்பட்டு இறந்ததற்கான அறிகுறிகள் இல்லை என நான் குறிப்பிடுகிறேன். கிரானுலோமா என்று மற்றொரு ஆய்வு முடிவும் TB–நோயினால் தாக்கம் ஏற்படுபவர்களுக்கு ஏற்படும் ஆனால் இந்த இறந்தவரது மூளைப்பகுதியில் காணப்படவில்லை என்பதால் அவர் இறப்பானது TB–நோயினால் ஏற்படவில்லை என்பதை என்னால் உறுதியாக சொல்ல முடியும்.

3. இறந்து போனவரது இதயம், சிறுநீரகம், மூளை, கல்லீரல் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஒரே நாளில் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. அவை நோய்க்கான காரணிகள் பல மாதங்களோ, வருடங்களோ இருந்தால் மட்டுமே அவ்வாறு ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு.மேற்கண்ட இறந்து போனவர்கள் உடலில் ஆர்கனோ பாஸ்பரஸ் என்று விஸ்ராவில் கண்டறியப்பட்டுள்ள விஷம் பல மாதம் மேற்கண்ட இறந்து போன நபருக்கு சிறு டோஸேக்குகளாக பல மாதங்கள்

கொடுக்கும் பட்சத்தில் இவ்வாறான மாற்றங்கள் அவரது உடலில் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. என்னிடம் காண்பிக்கக்கூடிய இறந்து போன நபரின் புகைப்படத்தை போது TB–யால் தாக்குதல் ஏற்பட்டு உடல் பாதிக்கப்பட்ட நபருக்கு இவ்வாறான உடல் வாக்குகள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் அவர் எடுத்துக் கொண்ட மருத்துவ பரிசோதனை அவரது உணவு பழக்க வழக்கம் மற்றும் அவர் செய்யும் வேலை ஆகியவற்றை பொறுத்து மட்டுமே அது பற்றிய கருத்து சொல்ல முடியும்.

2. எனக்கு நுரையீரல் பகுதி பரிசோதனைக்கு அனுப்பவில்லை. அவ்வாறு நுரையீரல் பகுதி அனுப்பினால் மட்டுமே அவர் TB–யால் பாதிக்கப்பட்டிருந்தாரா என்பதை உறுதியாக சொல்ல முடியும் என்றால், நுரையீரலை பார்த்தால் அவரது நுரையீரல் பகுதி TB–யால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறிய முடியும் ஆனால் எனக்கு அனுப்பப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை பார்த்து அவர் TB–யால் பாதிக்கப்பட்ட நபர் அல்ல என்று நான் கருத்துறை வழங்கி உள்ளேன்.

3. என்னிடம் காண்பிக்க கூடிய புகைப்படத்தை பார்த்து மேற்கண்ட இறந்து போன நபர் நோய் வாய்ப்பட்டு அதிக நாட்கள் படுத்த படுக்கையாக நடமாட்டம் இல்லாமல் இருந்ததாக தெரிகிறதா என்றால் அது பற்றி என்னால் கருத்து கூற முடியாது. நான் ஏற்கனவே கூறியுள்ள நீதிமன்ற கேள்வியில் ஆர்கனோ பாஸ்பரஸ் என்ற விஷமானது சிறிய டோஸ்களாக வெகு நாட்களாக கொடுத்தால் இவ்வாறான பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு உண்டு என கூறியுள்ள கருத்தானது தவறு என்றால் சரியல்ல. வழக்கின் விபரத்திற்கு தகுந்தவாறு முழுமையான அனைத்து உறுப்புகளும் பகுப்பாய்விற்கு எனக்கு அனுப்பவில்லை என்றால் அதற்கு ஏற்றார் போல் சில உடல் உள்ளுறுப்புகளை மட்டுமே பகுப்பாய்விற்கு அனுப்பியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

4. நான் வழக்கில் வழங்கியுள்ள கருத்துறை வழக்கின் அம்சத்திற்கு ஏற்றவாறு வழங்கி உள்ளேன் என்றால் சரியல்ல. அரசு தரப்பிற்கு ஏற்றவாறு நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆர்கனோ பாஸ்பரஸ் என்ற விஷப்பொருளை அவரது உணவில் கலந்து கொடுத்து அவரது உடல் பாதிப்படையவில்லை என்றும், விஷத்தின் அறிகுறி அவர்கள் உடலில் எதுவும் தென்படவில்லை என்றால் சரியல்ல. அவரது இறப்பு முழுக்க முழுக்க TB–நோயால் பாதிக்கப்பட்டதால் இறந்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் விஷத்தின் தன்மையால் அவரது இறப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.03 18:38:21 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.